[2005 ஏப்ரல் 11

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே இரயில்வே மேம்பாலமானது கட்டாயமாகத் தேவை என்ற குறிக்கோளோடு நகராட்சி நிருவாகத்தால் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்குச் சொந்தமான இடத்தை நீண்டகால குத்தகைக்கு வாங்கி கடைகள் கட்டுவதற்காக இன்றையதினம் அனுமதிகோரி முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஆகவே, விரைந்து அந்தப் பகுதியில் இருக்கின்ற அந்தப் பிரச்சினையைத் தீர்க்கின்ற வகையிலே அரசானது முனைப்போடு செயல்படும் என்று தெரிவித்து அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. பி.எஸ். அருள். அடுத்து சரவணன் இன்னொரு கேள்வி கேட்க வேண்டுமா? திரு. பி.எஸ். அருள்.

திரு. பி.எஸ். அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் ஒரு வேண்டுகோளாக நகராட்சி நிருவாகம் மீண்டும் மீண்டும் மூன்று முறை அவர்களுக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறது. தற்போதுகூட நோட்டீஸ் கொடுத்தார்கள். அதுசம்பந்தமாக எங்களது மாவட்ட அமைச்சர், கல்வி அமைச்சர் அவர்கள்கூட இரண்டு மாதங்களுக்கு முன்பு மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடந்த ஆய்வுக் கூட்டத்தில் பல்வேறு துறை சம்பந்தமாக ஆய்வு நடைபெற்றபோது இந்த மேம்பாலப் பிரச்சினையும் கொண்டு வரப்பட்டது. அப்போது நகராட்சி நிருவாகத்திடம் பல்வேறு கருத்துகள் கேட்கப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலே மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள்கூட இது சம்பந்தமாக அவர்களுக்கு மாற்று இடம் உடனே வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள். அதன் அடிப்படையிலே மாவட்ட ஆட்சித் தலைவர், சிதம்பரம் சார்-ஆட்சியர், வட்டாட்சியர் ஆகியோர் ஒரு குறிப்பாணையை உங்களுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே குறிப்பாக விரைவில் அந்தப் பணிகளை நீங்கள் செய்து தர வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டு அமைகின்றேன்.

5. அறிக்கை அளித்தல்

மதிப்பீட்டுக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்.

2005 ஏப்ரல் 11]

***திரு. பி.எச். பால் மனோஜ் பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். 2003–2005 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மதிப்பீட்டுக் குழுவின் பாசனம் குறித்த முப்பத்து ஒன்றாவது அறிக்கையை குழுவின் சார்பாக பேரவைக்கு அளிக்கிறேன்.*

6. அரசினர் சட்டமுன்வடிவு (அறிமுகம் செய்தல்)

சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2005

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் அறிமுகம் செய்தல். 2005 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.*

மாண்புமிகு திரு. கே.பி. அன்பழகன் : *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2005 ஆம் ஆண்டு சென்னை மாநகராட்சி (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு செய்தி & விளம்பரம் மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் (குறுக்கீடுகள்)...*

திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிமுக நிலையிலேயே இந்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன்.*

திரு. மு.க. ஸ்டாலின்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை ஆரம்ப நிலையிலேயே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் எதிர்க்கிறேன்.*

திரு. ஐ. கணேசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அறிமுக நிலையிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எதிர்க்கிறோம்.*

திரு. ஜி. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக அறிமுக நிலையிலே எதிர்க்கிறோம்.*